ஆணை பெற்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

18—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்

***18530—திரு. அ. பிரபு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், மாடூர் கிராமத்திற்கு கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். அழியாப் புகழ் பெற்றிருக்கின்ற தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்கி, அவர்களுடைய வழித் தொண்டர்களாக சாதனை சரித்திரம் படைத்திட்ட பாரத ரத்னா புரட்சித் தலைவர் அவர்களையும், தமிழர்குல சாமி புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் தகவல் தொழில்நுட்பத் துறையின்மூலம் 12.78 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் அரசுத் துறைகளின்கீழ் செயல்படும் எல்லா குறைதீர்ப்பு அமைப்புகளையும் ஒருங்கிணைத்து அவற்றிற்கு உடனடித் தீர்வு காண வரலாற்றிலே முதல் முறையாக முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டத்தை விதி 110-ன்கீழ் அறிவித்து, குறைதீர்க்கும் முகாம்களில் வேலைவாய்ப்பு வேண்டுவோருக்கு

2020 செப்டம்பர் 16]

சிறப்புக் கவனம் செலுத்தி, துறைகள் மூலமாக உடனுக்குடன் பரிசீலிக்கப்பட்டு, தேவைப்படின் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மனுதாரர்களுக்கு அளிக்கப்பட்டு, உரிய வேலைவாய்ப்பு வழங்கிட நடவடிக்கை எடுக்கின்ற வகையில் திட்டத்தை வடிவமைத்து, இளைய சமுதாயத்தின் வாழ்வில் நம்பிக்கை சுடரொளி ஏற்றி வைத்திருக்கின்ற இளைய சமுதாயத்தினுடைய நம்பிக்கை நட்சத்திரம், சாமானிய முதல்வராக சரித்திரம் படைத்து வருகின்ற COVID *19 கொரோனா நோய்த் தொற்றை தன் விரல் நுனியில் கட்டுக்குள் வைத்து, தாய் தமிழ்நாட்டின் தன்னிகரில்லா பாதுகாவலராக விளங்கி வருகின்ற மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு எந்நாளும் துணை நின்று சாதனை படைத்து வருகின்ற மாண்புமிகு தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இளைய சமுதாயத்தின் சார்பில் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி வணங்குகின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், மாடூர் கிராமத்திற்குக் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்ட கருத்துரு ஏதும் நிலுவையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.*

திரு. அ. பிரபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி நான் பணிந்து வணங்குகிறேன். விழுப்புரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்கித் தந்த தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். உருவாக்கிய புதிய மாவட்டத்திற்கு, மாவட்ட அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்து, அதற்கான இடத்தையும் தேர்வு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

கள்ளக்குறிச்சியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வட்டாட்சியர் அலுவலகத்தின் பழையக் கட்டடத்தைப் புதுப்பித்து, புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்திருந்தேன். அதை நிறைவேற்றும் வகையில், வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு பொதுவாக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது. அதுமட்டுமல்ல, இருக்கக்கூடிய கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள் எல்லாம் பழமையான மற்றும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. எனவே, நான் குறிப்பிட்டிருக்கின்ற கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஒன்றியம், மாடூர் ஊராட்சியில் இருக்கின்ற கிராம நிருவாக அலுவலகக் கட்டடமானது மிகவும் பழமையான கட்டடம். அது பழுதடைந்த நிலையில் இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் எளிதில் தொடர்புகொள்ளும் வகையிலும், அலுவலகச் சூழ்நிலையை மேம்படுத்தும்பொருட்டும், மாவட்ட ஆட்சியர் நிலை முதல் கிராம நிருவாக அலுவலர் நிலை வரை, அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் விதமாக, அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைத் தலைமை தாங்கி வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரிமை அளித்து வருகின்றார்கள். அந்த வகையில்தான் ஏறத்தாழ ரூ.612.30 கோடி செலவிடப்பட்டு, இன்றைக்கு 493 கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு

2020 செப்டம்பர் 16]

உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்த கிராம நிருவாக அலுவலகம் என்பது கள்ளக்குறிச்சி வட்டம், மாடூர் கிராமம், புல எண் 107/2013, நத்தம் புறம்போக்கில் ஏற்கெனவே இயங்கி வந்தது. சேலம்–சென்னை தேசிய நெடுஞ்சாலை உருவாக்கும் பணிக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டபோது, மேற்படி கிராம நிருவாக அலுவலகம் இடமாற்றம் செய்யப்பட்டு, தற்போது மாடூர் ஊராட்சிக்குச் சொந்தமான பஞ்சாயத்து அலுவலகக் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

முற்பகல் 11–10

மாடூர் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்ட புதிய இடம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த நிதிநிலை அறிக்கையில்கூட, ஐந்து புதிய மாவட்டங்களுக்கான மாவட்ட ஆட்சியர் மற்றும் கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையான கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு முன்னுரிமை அடிப்படையில், பரிசீலனை செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.*

திரு. அ. பிரபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தியாகதுருகம் ஒன்றியத்திலே, தியாகதுருகத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் அமைத்துத் தர வேண்டுமென்று நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்திருக்கின்றேன். காரணம் என்னவென்றால், தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதிகளில் இருக்கின்ற பல கிராம மக்கள் வட்டாட்சியர் அலுவலகம் செல்ல வேண்டுமென்றால், ஒன்று சங்கராபுரம் செல்ல வேண்டும் அல்லது கள்ளக்குறிச்சிக்கு செல்ல வேண்டும். சங்கராபுரம் செல்ல குறைந்தது 25 முதல் 40 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். எனவே,

மக்களின் சிரமத்தைக் குறைக்கின்ற வகையில் தியாகதுருகத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமத்தை பிரிப்பதற்கான வட்டாட்சியரின் பரிந்துரையைக்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். ஆகையால், அதனைக் கருத்தில்கொண்டு, தியாகதுருகத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வட்டம், புதிய கோட்டம், புதிய மாவட்டம் உருவாக்குவதற்கு வருவாய் கிராமங்கள், பரப்பளவு, மக்கள் தொகை என்ற அடிப்படையிலேதான் அது உருவாக்கப்பட்டு வருகிறது. அந்த வகையிலே, வருவாய்த் துறை வரலாற்றிலேயே முதன் முறையாக ஒரே ஆண்டிலே மக்களுடைய தேவைகளைக் கருதி, மக்கள் நலனை முன்னிறுத்தி, ஐந்து புதிய மாவட்டங்களை உருவாக்கித் தந்த (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுப் பெருமை தமிழ்நாட்டினுடைய எளிய முதலமைச்சராக சரித்திரம் படைத்துவருகிற அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசினையும் சாரும். அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரபு அவர்களும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. குமரகுரு அவர்களும் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் கள்ளக்குறிச்சியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டு, அது தற்போது சீரும் சிறப்புமாகச் செயல்பட்டு வருகிறது. ஆகவே, இப்போது அவர் வைத்திருக்கின்ற கோரிக்கை என்பது மக்கள் தொகை, பரப்பளவு, வருவாய் கிராமம் என இவையெல்லாம் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, நிதிநிலைக்கேற்ப ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.